அஸ்மத் குருப்யோ நம:

அஸ்மத் பரம குருப்யோ நம:

அஸ்மத் ஸர்வகுருப்யோ நம:

ஸ்ரீரங்கநாதயதீஸேகரம் ஆஸ்ரயாம:

வேதாந்த லக்ஷ்மணமுநே: பாதரேகாமயம் ஸதா

ததீனப்ருவ்ருத்யாதீம் ஹாரீதம் மாதவம் பஜே

# தேசிகப்ரபந்தம்...பிள்ளையந்தாதி



## பதினைந்தாம் பாசுரம்

உன்னருளன்றி எனக்கொருநற்றுணையின்மையினால்

என்னிருவல்வினைநீயேவிலக்கி யிதங்கருதி

மன்னியநல் திருமந்திரமோதும்பொருள்நிலையே

பொன்னருளால் அருளாய் புகழ்தூப்புல் குலவிளக்கே

## பாசுரார்த்த பொருள் அநுபவ ப்ரமாணங்களுடன்

திருமந்திரத்தில் கூறப்பட்ட நிஷ்டை பெற தூப்புல் குல விளக்குதான் கதி நமக்கு.

உன் அருள் அன்றி

தேவரீர் க்ருபை அது இல்லை எனில்

உன் அநுக்ரஹம் அதனால் நெஞ்சம் இசைந்ததை கொண்டாடுகிறார்.

யானும்என்னெஞ்சும் இசைந்தொழிந்தோம் * வல்வினையைக்

கானும்மலையும் புகக்கடிவான் * - தானோர்

இருளன்னமாமேனி எம்மிறையார்தந்த *

அருளென்னும்தண்டாலடித்து.

(**பெரிய திருவந்தாதி**)

ப்ரபன்னனை ஒருகாலும் விடமாட்டேன் என்று விரதம் பூண்டவர்.

ஸக்ருத்ப்ரபந்ந ஜப் ஸம்ரக்ஷண தீக்ஷித

(**ரகுவீரகத்யம்**)

எனக்கு ஒரு நல்துணை இன்மையினால்  சரியான நல்அறிவுடையோர் ஆதரவு இல்லாமல் போய்விடும்

மாண்ட இராவணனை பார்த்து மண்டோதரி

துணைவனே நீ பிரிந்தவுடனே. நீ இன்மையால் சூர்ய கதிர்கள் இலங்கையில் நுழைந்து விட்டனவே. எழுந்திரு எழுந்திரு

உத்திஷ்ட உத்திஷ்ட கிம் ஸேஷே ப்ராப்தே பரிபவே நவே|

அத்யவை நிர்ப்பயா லங்காம் ப்ரவிஷ்டா: ஸூர்யரஸ்மய:||

(**ஸ்ரீமத்ராமாயணம்-யுத்த காண்டம்**)

தாளதாமரைத் தடமணிவயல்திருமோகூர் *

நாளும்மேவிநன்கமர்ந்துநின்று அசுரரைத்தகர்க்கும் *

தோளும்நான்குடைச் சுரிகுழல்கமலக்கண்கனிவாய் *

காளமேகத்தையன்றி மற்றொன்றிலம்கதியே.

**(திருவாய்மொழி)**

எம்பெருமான் ஆழ்வார்க்கு உயிர்தன்னைக்கிட்டும் வகையைக் (அர்ச்சிராதிக்தியைக்) காட்டி இவரது விருப்பங்களைத் தலைக்கட்டுதல். ஆகவே திருமோகூர் எம்பெருமானே நற்துணை.

என் இரு வல்வினை

இதனால் அடியேனின் பாவம் புண்யம்  என்ற  வினைகள் இரண்டையும்

யாவஜ்ஜீவம் ஜகதி நியதா தேஹ யாத்ரா பவித்ரீ த்யக்தா: ஸர்வே த்ரிசதுர திநக்லாந போகா நபோகா:

தத்தே ரங்கீ நிஜமபி பதம் தேஸிகாதேஸ காங்க்ஷீ கிம் தே சிந்தே பரமபிமதம் கித்யஸே யத் புநஸ்த்வம்||

**(ந்யாஸதிலகம்)**

இருவினைப்படி தேஹயாத்ரை. அல்ப கால ஸ்வர்கபலன் அஸ்த்திரம் என்பதால் விடப்பட்டன. ஆச்சார்யன் மூலம்

ஸ்ரீரங்கனின் திருவடி தர இருப்பதால் மனமே கவலை வேண்டாம்.

இருவினை கழித்தல் விரசயாற்றை கடத்தல்

சொல்லப்பட்டது.

பண்டை இருவினை ஆற்றில் படிந்து பாரம்

காணாதே ஒழுகிய நாம் பாக்கியத்தால் *

வண்டு அமரும் மலர்மாதர் மின்னாய் மன்ன

வைசயந்தி மணிவில்லாய் விளங்க வான்சேர் *
கொண்டல் அருள் மழைபொழிய வந்ததொப்பாம்
குளிர்ந்து தெளிந்து அமுதாய விரசையாற்றைக் *
கண்டு அணுகிக் கருத்தாலே கடந்து மீளாக்
கரைகண்டோர் கதியெல்லாம் கதித்திட்டோமே

நீயே விலக்கி இதம் கருதி

தேவரீரே விலக்க வேண்டும் மேலும் ஹிதத்தையும் அநுக்ரஹிக்க வேண்டும்.

மோஹாந்தகார விநிவர்த்தந ஜாகரூகே தோஷா
திவாபி நிரவக்ரஹமேதமாநே|
த்வத்தேஜஸி த்விரத ஸைலபதே விம்ருஷ்டே
ஸ்லாக்யேத ஸந்தமஸ பூர்வ ஸஹஸ்ர பாநோ:|

**(வரதராஜ பஞ்சாசத்)**

அஸ்திகிரி அதீசனே! அறியாமையாகிற உள்ளிருளை போக்கி, இரவு பகல் எந்நேரமும் குறைவற பிரகாசிக்கும் உன் தேஜஸ்ஸைப் பார்த்தவர்கள், கிருஷ்ண பக்ஷத்தில் (

அமாவாஸ்யை) ஸூர்யனையும் ஒரு தேஜஸ்ஸாகக் கொண்டாடுவர்

களோ?  ஆகவே அறியாமை இருள் போக்கி அறிவு சுடர் ப்ரகாசிக்க அநுக்ரஹிக்க வேண்டும்.

ஆழ்வார் இருள் பகவானால் விலக்கப்பட்டு ஒளி விளக்கு ஏற்றப்பட்ட விதத்தை கூறுகிறார் இங்கு.

மன்னுமாநிலனும்மலைகளும்கடலும்

வானமும்தானவருலகும் *

துன்னுமாயிருளாய்த்துலங்கொளிசுருங்கித்

தொல்லைநான்மறைகளும்மறைய *

பின்னும்வானவர்க்கும்முனிவர்க்கும்நல்கிப்

பிறங்கிருள்நிறங்கெட * ஒருநாள்

அன்னமாயன்றங்கருமறைபயந்தான்

அரங்கமாநகரமர்ந்தானே.

**(பெரிய திருமொழி)**

மன்னிய நல் திருமந்திரம் ஓதும் பொருள் நிலையே *

உயரிய திருமந்திரத்தில் கூறப்படும்  ஸ்வரூப நிஷ்டை,

உபாய நிஷ்டை ,புருஷார்த்த நிஷ்டை

அஹம் மத்ரக்ஷண பரோ மத்ரக்ஷண பலம் ததா |

ந மம ஶ்ரீபதேரேவேத்யாத்மாநம்

நிக்ஷிபேத்புத:||

**(ந்யாஸ தசகம்)**

ஸ்வரூபம் உபாயம் பயன் மூன்றுமே ஶ்ரீயபதியின் பொறுப்பு. அதாவது சாத்வீக த்யாக ஸங்கல்ப பொறுப்பு துறப்பு சொல்லபடுகிறது.

மூவகை திருமந்திர நிஷ்டை எளிமையாய் கூறப்பட்டுள்ளது.ஒ

எனக்கு உரியன் எனது பரம் என் பேறு என்னாது

இவையனைத்தும் இறையில்லா இறைக்கு அடைத்தோம் *

(அமிர்த ரஞ்சனி)

ஆவிஸ்ய தாரயஸி விஸ்வமமுஷ்ய யந்தா ஸேஷீ
ஸ்ரிய: பதிரஸேஷ தநுர்நிதாநம்|

இத்யாதி லக்ஷண கணை: புருஷோத்தமம் த்வாம்
ஜாநாதி யோ ஜகதி ஸர்வவிதேஷ கீத:||

**(சரணாகதி தீபிகை)**

ஶ்ரீமந் நாராயணன் உட்புகுந்து
தாங்குபவன்.நடத்துபவன்.உரிமையுடையோன்முழுமுதல்

காரண பூதன். உலகை உடலாக கொண்டவன்.ஸ்ரீயப்பதி.சேதானா அசேதனங்கள் அவனுக்காக.

நமக்கு உபாயம் பலன் அவனே.இதனை அறிந்தவன் எல்லாம் அறிந்தவன்.

பொன் அருளால் அருளாய்

மேற்கூறிய நிஷ்டை களை அடியேன் பெற தேவரீரின் திவ்ய கருணா கடாக்ஷம் நிச்சயம் வேண்டும்

அடியேன்

புரஸ்க்ருத்ய ஜகத்தாத்ரீம் மனஸோபி புரஸ்ஸரா: |

துக்தோதிஷயம் தேவம் தூரமேத்யாபிதுஷ்டுவு;||

**(யாதவாப்யுதயம் முதல் ஸர்கம்-42)**

தேவர்கள் பூமிபிராட்டியை முன்னிட்டு காற்றின் வேகத்தை மிஞ்சி திருப்பாற்கடலை அடைந்து சயன ஸ்ரீமந் நாராயணனை துதி செய்தனர்.

ஸ்ரீராமஸ்துதி ஸ்ரீக்ருஷ்ணக்ஷேத்ரத்திலே

பரதனும்தம்பிசத்துருக்கனனும்

இலக்குமனோடுமைதிலியும் *

இரவுநன்பகலும்துதிசெய்யநின்ற

இராவணாந்தகனைஎம்மானை *

குரவமேகமழும் குளிர்பொழிலூடு

குயிலொடுமயில்கள்நின்றால *

இரவியின்கதிர்கள் நுழைதல்செய்தறியாத்

திருவல்லிக்கேணிக்கண்டேனே. **(பெரிய திருமொழி-திருவல்லிக்கேணி)**

புகழ் தூப்புல் குலவிளக்கே.

ஸாஸ்த்ர வழி புகழ் ராமானுஜ குல தீபமே ஸ்வாமி தேசிகனே.

பகவான் விளக்காக அழைக்கபடும் விதம்

நந்தாவிளக்கே! அளத்தற்கு அரியாய்!

நரநாரணனே! கருமாமுகில் போல்

எந்தாய்! * எமக்கே அருளாயெனநின்று

இமையோர் பரவும் இடம் * எத்திசையும்

கந்தாரம் அந்தேன் இசைபாடமாடே

களிவண்டுமிழற்ற நிழல்துதைந்து *

மந்தாரம் நின்று மணமல்குநாங்கூர்

மணிமாடக் கோயில் வணங்கு என்மனனே

**(திருமங்கை ஆழ்வார்)**

ஸ்நேஹோபபந்த விஷய: ஸ்வ தஸா விஸேஷாத்
பூயஸ்தமிஸ்ர ஸமிநீம் புவி வேங்கடஸ:|

திவ்யாம் ஸ்துதிம் நிரமிமீத ஸதாம் நியோகாத்
தீபப்ரகாஸ ஸரணாகதி தீபிகாக்யாம் !!

**(சரணாகதி தீபிகை)**

இந்த பூமிதனில் வேங்கடநாதன்

பக்தியாகிய எண்ணை

பகவதநுபவ திரி இவை கொண்டு விளக்கொளி
எம்பெருமானுக்கு ஸரணாகதி தீபிகை என்ற ஜோதி
ஏற்றப்பட்டது.

## முடிவுரை பொருள்:

ஆகவே நாம்

கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணஸாலிநே|

ஸ்ரீமதே வேங்கடேஸாய வேதாந்தகுரவே நம:||

என நம் குலவிளக்கு ஸ்வாமி தேசிகனை கொண்டாடுவோம்

**தொடரும். . .**